WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 06.02.2026

CORAM

THE HONOURABLE MR.**JUSTICE V. LAKSHMINARAYANAN**

**Contempt Petition No.404 of 2026**

K.V.Kandasamy
S/o. Vaiyapuri, 5th Ward, Appusamy Street,
Kolathur - 636 303,
Mettur Taluk, Salem District. ... Petitioner

Versus

1. Dr.D.Karthikeyan, IAS
State of Tamil Nadu,
Principal Secretary to Government,
Municipal Administration and Water
Supply Department, Secretariat,
Chennai - 600 009.

2.M.Pradeep Kumar,
The Director of Town Panchayats,
Santhome High Road, Chennai -28.

3.Sulaiman
The Assistant Director
(Town Panchayats),
Salem Region, Salem.

4.Usha
The Executive Officer,
Kolathur Selection Grade Town
Panchayat, Kolathur - 636303,
Mettur Taluk, Salem District. … Respondents



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**PRAYER:** Petitions filed under Section 11 of the Contempt of Courts Act, 1971, to punish the respondents for the willful disobedience of the orders of this Court passed in WP No.3876 of 2018 dated 22.02.2018.

For Petitioner : Mr.M.P.Rajavelayutham

For Respondents : Ms.Indhu Bala,
Additional Government Pleader

**ORDER**

When the matter was called, Ms.Indhubala, appearing for the respondents, reports in compliance to the order passed in WP No.3876 of 2018 dated 22.02.2018, orders have been passed. The same are scanned and extracted hereunder:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

அனுப்புநர்
திருமதி ஜி உஷா
செயல் அலுவலர் ,
கொளத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி
சேலம் மாவட்டம்.

பெறுநர்
அரசு வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம்
சென்னை

ந.க.எண். 72/2018, நாள்.05.02.2026

அய்யா,

பொருள் – நீதிமன்ற அவமதிப்பு (Contempt) வழக்கு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சேலம் மண்டலம் – சேலம் மாவட்டம் – கொளத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி – திரு.கே.வி.கந்தசாமி, கொளத்தூர் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு – வழக்கு எண்.டபிள்யு.பி. நெ.3876/2018 மற்றும் டபிள்யு.எம்பி. நெ. 4763/2018 தீர்ப்பாணை – திரு.கே.வி.கந்தசாமி, கொளத்தூர் என்பவரால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பாணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் ஏற்கனவே பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது – இவ்வழக்கு குறித்து மீண்டும் வழக்கு எண். 404/2026ன்படி அவமதிப்பு (Contempt) வழக்கு தொடரப்பட்டுள்ளது – தொடர்பாக

பார்வை –

1. திரு.கே.வி.கந்தசாமி, த/பெ.வையாபுரி, 15,அப்புசாமிதெரு, கொளத்தூர் என்பவரின் விண்ணப்பம் நாள் 09.02.2018.
2. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண். டபிள்யு எம்.பி.நெ.4753/2018 தீர்ப்பாணை நாள் 22.2.2018.
3. திரு. எஸ்.துரைசாமி, வழக்கறிஞர் என்பவரின் கடிதம் நாள் 27.02.2018.
4. சேலம் மண்டலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் அவசரக் குறிப்பாணை ந.க.எண். 1180/208/பே3 நாள் 10.03.2018 மின்னஞ்சல் செய்தி.
5. கொளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண். 72/2018, நாள் 15.3.2018.
6. கொளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண். 72/2018, நாள் 16.3.2018.
7. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2868/2018/இ3 நாள் 21.3.2018
8. திரு.கே.வி.கந்தசாமி, அப்புசாமிசெட்டி தெரு, கொளத்தூர் என்பவரால் அளிக்கப்பட்ட அறிக்கை நாள் 23.3.2018
9. செயல் அலுவலர்,கொளத்தூர் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 72/2018 நாள். 20.04.2018
10. கொளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதக்குறிப்பு ந.க.எண். 72/2018, நாள் 29.06.2018.
11. செயல் அலுவலர்,கொளத்தூர் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 72/2018 நாள். 05.07.2018
12. திரு வி. இளங்கோவன், வழக்குரைஞர், நெ,223 என்.எஸ்.சி போஸ் ரோடு, ஒய்.எம்.சி.எ. பில்டிங்ஸ், இரண்டாவது தளம் சென்னை 600001 என்பவரின் லீகல் நோட்டீஸ், நாள். 04.11.2025 இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற நாள். 11.12.2025.
13. அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பே2 தலைமைச் செயலகம், சென்னை 600009 அவர்களின் கடிதம் லெட்டர் நெ.9577/பே–2/2025–1 நாள்.12.12.2025. இவ்வலுவலகத்தி கிடைக்கபெற்ற நாள். 22.12.2025.
14. இவ்வலுவலக ந.க.எண். 72/2018 நாள். 22.12.2025
15. கொளத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 281(10) நாள்.31.12.2025
16. சென்னை உயர்நீதிமன்ற அவமதிப்பு (Contempt) வழக்கு எண். 404/2026 in W.P.No. 3876/2018 இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற நாள். 05.02.2026.

------

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

சேலம் மாவட்டம், கொளத்தூர் பேரூராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையக் கடைகள் மற்றும் தண்டா மெயின்ரோட்டில் உள்ள வணிக வளாகக் கடைகள் ஆகியவற்றிற்கு முறையாக ஏலம் நடத்தப்படாமல், தொடர்ந்து பல ஆண்டுகளாக தனிப்பட்ட நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும், குத்தகை எடுத்த நபர்கள் கடைகளை நடத்தாமல் வேறு நபர்களுக்கு உள்வாடகைக்கு விட்டுள்ளதாகவும், இக்கடைகள் 2018ஆம் ஆண்டு பொது ஏலத்திற்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்த நிலையில், தற்போது இக்கடைகள் பழைய குத்தகைதாரர்களுக்கே புதுப்பித்து வழங்க முயற்சிப்பதால், இக்கடைகளுக்கு தற்போது பொது ஏலம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பார்வை 1ல் காணும் மனுவில் திரு.கே.வி.சந்தசாமி, த/பெ. வையாபுரி என்பவரால் கோரப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.கே.வி.கந்தசாமி என்பவர், மேற்காணும் கோரிக்கையினை முன்னிறுத்தி சென்னை உயர்நீதி மன்றத்தில் டபிள்யுபி.நெ.3876/2018–ன்வாயிலாக 1) அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை, (2) பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை (3) சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், (4) செயல் அலுவலர், கொளத்தூர் பேரூராட்சி ஆகியோருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், பார்வை 2ல் காணும் தீர்ப்புரையில், மனுதாரரின் 09.02.2018ஆம் தேதிய மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு போதுமான கால அவகாசம் அளித்து உரிய சட்ட விதிமுறைகளை அனுசரித்து மனுவின்மீது 8 வார காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள் உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் வழக்கறிஞர் திரு.எஸ்.துரைசாமி என்பவரின் 27.02.2018ம் தேதிய கடிதத்தில், பார்வை 2ல் காணும் மேற்காணும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கின் தீர்ப்பாணையின்படி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்துள்ளார்.

பார்வை 4ல் காணும் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் குறிப்பாணையின்படி, பார்வை 5ல் கொளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில், கடைகள் ஏலம் விடப்பட்ட விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது)

மேலும் பார்வை 6ல் காணும் கொளத்தூர் பேரூராட்சி செயல்அலுவலரின் கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையின் தொடர்ச்சியாக, மனுதாரரை 23.03.2018ந் தேதியன்று விசாரணைக்கு நேரில் அழைக்கப்பட்டு, மனுதாரர் கொளத்தூர் பேரூராட்சியில் நேரில் ஆஜரானார். மனுதாரரின் கோரிக்கையின்படி ஏலம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடைகள் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பொது ஏலம் / டெண்டர் நடத்தப்பட்டு வாடகைக்கு விடப்பட்டு ஏலத்தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை உரிய விளக்கத்துடன் தெரிவிக்கப்பட்டது. மேலும் மனுதாரரிடம் பேரூராட்சி கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் டெண்டர் முறையாக விதிமுறைகளுக்குட்படுத்தப்பட்டு நடத்தப்பட்டதற்கான ஆவணங்களை காண்பித்து செயல் அலுவலரால் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மனுதாரர் திரு.கே.வி.கந்தசாமி என்பவர், மேற்காணும் ஆவணங்களை பார்வையிட்டதன் அடிப்படையில், பேரூராட்சி கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் டெண்டர் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு முறையாக ஏலம் நடத்தப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளது தனக்கு மனதிருப்திகரமாக உள்ளதாகவும், இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை என பார்வை 6ல் காணும் கடிதத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளார். (நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) எனவே மேற்படி கடைகளுக்கு மறுஏலம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

–2

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



மேலும் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் 19.04.2018ந் தேதிய நேரடி விசாரணையிலும், இவர் பேரூராட்சி கடைகளுக்கான பொது ஏலம் மற்றும் டெண்டர்கள், விதிமுறைகளின்படி முறையாக நடத்தப்பட்டு, கடை வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளதை கொளத்தூர் பேரூராட்சியில் பார்வையிடப்பட்டதாகவும், தனக்கு மனதிருப்தியாக உள்ளதாகவும், இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரர் திரு.கே.வி.கந்தசாமி என்பவருக்கு, பார்வை 10ல் காணும் கடிதம் வாயிலாக நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் ஒப்புதல் கடித நகல் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன்.

மேலும் பார்வை 12 மற்றும் 13ல் காணும் கடிதத்தில் 22.10.2018ன் தீர்ப்புரையின்படி ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பேரூராட்சியில் 2018–19ம் ஆண்டின் மாத வாடகை தொகையை விட சேலம் பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) பொறியாளர் அளித்துள்ள வாடகை மதிப்பு மிக குறைவாக உள்ளதால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும். எனவே, தற்போதைய மார்க்கெட் நிலவரத்தின் அடிப்படையில் 2018–19ம் ஆண்டின் ஏலத்தொகையுடன் 15 சதவீதம் கூடுதலாக மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காண் மாத வாடகை அடிப்படையில் ஏற்கனவே அனுபவத்தில் உள்ள நபர்களுக்கு 2019–2020ம் ஆண்டு முதல் 9 ஆண்டுகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யும் வகையில் கடைகள் ஒப்படைக்கப்பட்டு ஏலத்திற்கான கால நீட்டிப்பு 31.03.2028ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு கடை வாடகைகள் உயர்த்தி வசூல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

| 2019–20 முதல் 2021–22 வரை பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு மூன்றாண்டு காலத்திற்கு 15% சதவீதம் உயர்த்தி வசூல் செய்யப்பட்ட தொகுப்பு வாடகை தொகை ரூ. | 2022–23 முதல் 2024–25 வரை பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு மூன்றாண்டு காலத்திற்கு 15% சதவீதம் உயர்த்தி வசூல் செய்யப்பட்ட தொகுப்பு வாடகை தொகை ரூ. | 2025–26 முதல் 2027–28 வரை பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளுக்கு மூன்றாண்டு காலத்திற்கு 15 சதவீதம் உயர்த்தி வசூல் செய்யப்பட்ட தொகுப்பு வாடகை தொகை ரூ. |
|---|---|---|
| 5272082 | 6062894 | 6208061 |

மேலும் நாளது வரை பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து கடைகளும் ஏலம் விடப்பட்டு வாடகை நிலுவையின்றி 100 சதவீதம் வசூல் செய்யப்பட்டு விட்டது. இதில் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என்ற விபரத்தினை பார்வை 15ல் காணும் விவரப்படி தகவல் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பார்வை 15ல் காணும் மன்ற தீர்மானத்தின்படி கடைகள் அனைத்தும் 01.04.2028 முதல் பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது சென்னை உயர் நீதிமன்ற அவமதிப்பு (Contempt) வழக்கு எண். 404/2026 in W.P.No. 3876/2018ன்படி புகார் மனுதாரர் கடைகளை ஏலம் விட கோரியுள்ளார். மேலும் மேற்காண் ஏலத்திற்கான கால நீட்டிப்பு காலம் முடிந்தவுடன் 01.04.2028 முதல் கடைகள் பொதுஏலம் விட பரிசீலனை செய்யப்படும் என்பதை மிக பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5/3/2026

செயல் அலுவலர்,
கொளத்தூர் சிறப்புநிலை பேரூராட்சி
சேலம் மாவட்டம்.

இணைப்பு – உரிய இணைப்புகள்.

நகல் –

1. திரு.கே.வி.கந்தசாமி, த/பெ.வையாபுரி, 15,அப்புசாமிதெரு, கொளத்தூர்
2. திரு வி. இளங்கோவன், வழக்குரைஞர், நெ.223 என்.எஸ்.சி போஸ் ரோடு, ஒய்.எம்.சி.ஏ. பில்டிங்ஸ், இரண்டாவது தளம் சென்னை 600001

WEB COPY



2. A copy of the same has been handed over to Mr.M.P.RajaVelayudham. If he is still aggrieved by the order, he can challenge the same in accordance with law. Hence, the Contempt Petition is closed.

**06.02.2026**

Internet : Yes/ No
Speaking Order/ Non-speaking Order
jv



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



To

1. Dr.D.Karthikeyan, IAS
State of Tamil Nadu,
Principal Secretary to Government,
Municipal Administration and Water
Supply Department, Secretariat,
Chennai - 600 009.

2.M.Pradeep Kumar,
The Director of Town Panchayats,
Santhome High Road, Chennai -28.

3.Sulaiman
The Assistant Director
(Town Panchayats),
Salem Region, Salem.

4.Usha
The Executive Officer,
Kolathur Selection Grade Town
Panchayat, Kolathur - 636303,
Mettur Taluk, Salem District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**V. LAKSHMINARAYANAN, J.**

jv

**Contempt Petition No.404 of 2026**

**06.02.2026**



https://www.mhc.tn.gov.in/judis